FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165103

1. District : Tirunelveli PS: Vigilance and Anti Corruption Year: 2025 FIR No.: 06/2025 Date: 22.09.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 18.09.2025 நாள் வரை 16.30 hrs
Time Period : Time from : 22.09.2025 Time to : 14.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 22.09.2025 Time : 19.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 22.09.2025 Time : 19.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: V.A.O office, Koodankulam, Radhapuram Taluk Tirunelveli District. 76 Km South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt.Vijaya (b) Father's/ Husband's Name : Tr.I.Baskar
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 03.06.1977 நாட்டினம் INDIAN வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் --

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் -- வழங்கப்பட்ட இடம் --

(f) Occupation : Cooli (g) Address : Door No.9/286, Mathakovil Melpuram, Koodankulam, Radhapuram Taluk, Tirunelveli District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Stalwin Jeyaseelan, Village Administrative Officer, Radhapuram Taluk, Koodankulam, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 22.09.2025-ம் தேதி இரவு 19.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ராபின் ஞானசிங் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது கூடன்குளத்தை சேர்ந்த திருமதி.பா.விஜயா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா, கூடன்குளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.ஸ்டால்வின் ஜெயசீலன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவின்படி ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து, அவர்களின் வாய்மொழி அனுமதி பெற்று 22.09.2025-ம் தேதி 20.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2025 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 என வழக்கு பதிவு செய்தேன்.

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B-விஜயா 22-9-25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 22/09/2025 at 21.30 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் D. Robin Gnanasingh
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police
VEAC, Tirunelveli

Continuation of Tirunelveli Vigilance and Anti Corruption Crime No.06/2025:-

மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் பா.விஜயா, க/பெ.ஐ.பாஸ்கர், 9/286, மாதா கோவில் மேல்புரம், கூடன்குளம், ராதாபுரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் கூடன்குளம் அனுமின் நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையில் பெயின்டிங் உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். எனது கணவரின் தந்தை திரு.ஐயங்கண் நாடார் என்பவருக்கு சொந்தமான கூடன்குளம் கிராமம், கூடன்குளம் பனைத்தோட்டம் குடியிருப்பு, ரீ-சர்வே எண்.282(17), பட்டா எண்.1250-ல் கண்ட 1.5 சென்ட் இடத்தில் காம்பவுண்ட் சுவருடன் கூடிய ஓட்டுப்பரை வீட்டினை, எனது கணவரின் தந்தை இறந்தபடியால் எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர்கள் திரு.சுதாகர், திரு.பிரபாகர் மற்றும் சகோதரிகளான திருமதி.சுலோச்சனா மற்றும் திருமதி.ரெஜினா ஆகிய நான்கு பேர்களும் சேர்ந்து எனது கணவர் பெயருக்கு இராதாபுரம் சார் பதிவாளர் அலுவலக பாக பாத்திய விடுதலை ஆவண எண்.419/2016-ன் படி 12.02.2016-ம் தேதி எழுதி கொடுத்து அதுமுதல் நாங்கள் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறோம். மேற்படி இடத்திற்கான பட்டா எனது கணவரின் தந்தையான காலஞ்சென்ற திரு.ஐயங்கண் நாடார் பெயரில் உள்ளது. எனது கணவர் வேலைக்கு சென்றுவிட்ட காரணத்தினாலும், அவர் அடிக்கடி லீவு எடுக்க முடியாத காரணத்தினாலும் அரசின் சார்பில் 21.08.2025-ம் தேதி கூடன்குளம் அனுசங்கமம் கல்யாண மண்டபத்தில் வைத்து "உங்களுடன் ஸ்டாலின்" என்ற பெயரில் நடைபெற்ற முகாமில் நான் அங்கு சென்று அங்கு இருந்த அதிகாரியிடம், எனது கணவரின் பெயரில் உள்ள மேற்படி வீட்டிற்கு பட்டா பெயர் மாறுதல் செய்வதற்காக சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொடுத்து, நான் பயன்படுத்தி வரும் போன் எண்.9791537632-யும் கொடுத்தேன். அவர்கள் அதை பதிவு செய்து எனக்கு ஒரு ரசீது கொடுத்தார்கள். இந்நிலையில் கடந்த 18.09.2025-ம் தேதி சாயங்காலம் சுமார் 4 மணியளவில், எனது போனில் தொடர்பு கொண்ட கூடன்குளம் தலையாரி திரு.சுரேஷ் அவர்கள் மேற்படி பட்டா மாறுதல் தொடர்பாக தானும், கூடன்குளம் வி.ஏ.ஓ-வும் எனது வீட்டிற்கு வருவதாக சொன்னார். பின்னர் சுமார் அரைமணி நேரம் கழித்து மேற்படி வி.ஏ.ஓ-வும், தலையாரியும் எனது வீட்டிற்கு வந்தனர். மேற்படி இடம் தொடர்பான பத்திரத்தை வாங்கி பார்த்துவிட்டு வி.ஏ.ஓ என்னிடம் பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டுமானால் அதிக செலவாகும் என்றும் அதற்கு ரூ.30,000/- பணம் தர வேண்டும் என்று கூறிவிட்டு சென்றுவிட்டனர். எனவே நான் எங்கள் ஊரில் உள்ள கூடன்குளம் வி.ஏ.ஓ ஆபிசிற்கு இன்று 22.09.2025 மதியம் சுமார் 2.30 மணியளவில் சென்று அங்கிருந்த வி.ஏ.ஓ பிள்ளால் பெயர் கேட்டு தெரிந்த திரு.ஸ்டால்வின் ஜெயசீலன் என்பவரை சந்தித்து எனது கணவரின் பெயரில் பட்டா பெயர் மாறுதல் குறித்து கேட்டபோது, அவர் என்னிடம், பட்டா பெயர் மாற்றம் செய்து தர ஏற்பாடு செய்து தருவதற்கு தான் ஏற்கனவே சொன்னபடி ரூ.30,000/- பணத்தை கேட்டார். நான் என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொன்னதற்கு மேற்படி வி.ஏ.ஓ ரூ.25,000/- பணம்

கண்டிப்பாக தர வேண்டும் என்றும் இல்லாவிட்டால் பட்டா பெயர் மாற்றம் செய்துதர முடியாது என்றும் சொன்னார். நான் அவரிடம் தற்போது என் கையில் பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நாளை (23.09.2025-ம் தேதி) காலை 11.00 மணியளவில் பணத்தை ரெடி பண்ணிட்டு அவரது அலுவலகத்திற்கு வந்து பணத்தை தருமாறு சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின் நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபோது, அரசு வேலையை செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கிறாரே என்று என் மனம் சங்கடப்பட்டது. எனக்கு லஞ்சமாக வி.ஏ.ஒ-க்கு பணம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பமில்லை. எனவே வி.ஏ.ஒ திரு.ஸ்டால்வின் ஜெயசீலன் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.25,000/- நான் வைத்துள்ளேன். 21.08.2025 அன்று எனக்கு கொடுத்த ஒப்புகைச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் கூடன்குளம் வி.ஏ.ஒ திரு.ஸ்டால்வின் ஜெயசீலன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நாள்:-22.09.2025 இடம்:கூடன்குளம் இப்படிக்கு, sd. (B.விஜயா).

Sir, Received this complaint along with receipt no.2025/N103/29/023598 dated 21/08/25 today on 22.09.2025 at 19.30 hrs and conducted confidential enquiry and found prima facie, hence informed the matter to the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai, obtained permission orally and I registered a case in Tirunelveli V&AC Cr.No.06/2025 u/s 7(a) of P.C (Amendment) Act, 2018 today on 22.09.2025 at 20.30 hrs. sd. D.Robin Gnanasingh, 22.9.25. Inspr., of Police, V&AC, TIN.

இந்த வழக்கின் அசல் FIR, வாதியின் அசல் புகார் மனு மற்றும் 21/08/25-ம் தேதியிட்டு வழங்கப்பட்ட அசல் ஒப்புகைச்சீட்டு ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை நீதிபதி மற்றும் அமர்வு நீதிபதி, திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

22/9/25

D. Robin Gnanasingh

Insp. of Police

V&AC, Tirunelveli.